# கோயில் திருமேனிகள்

கடவுளர், முனிவர்கள், யோகிகள், தவசிகள் போன்றோரின் உடலைக் குறிப்பிடும் போது திருமேனி அதாவது, தெய்வீகம் நிரம்பிய மேன்மையான சரீரம் என்ற பொருளில் குறிப்பிடுவர்.

## செப்புத் திருமேனிகள்:

- கோயில்களில் இடம் பெற்றுள்ள திருமேனிகளில் செப்புத் திருமேனிகள் தனிச்சிறப்புடையவை.
- செப்புத் திருமேனிகள் ஐம்பொன்னில் வார்க்கப்படுகின்றன.
- சோழ மன்னர்களின் ஆட்சிக் காலத்தை செப்புத் திருமேனிகளின் பொற்காலம் எனலாம்.
- இறைவன் திருவீதி உலாவரும் போது கோயில் கருவறையில் உள்ள மூலவரை வெளிக்கொணர இயலாது. எனவே உற்சவமூர்த்தி தனியாக இருக்க வேண்டும் என்ற காரணத்தினால் செப்புத் திருமேனிகள் செய்யப்பட்டன.
- சங்க காலத்தில் உலோகங்களினால் கடவுள் சிலைகள் செய்யப்படுவதற்கான சான்றுகள் எதுவும் கிடையாது. அக்காலத்தில் மண், மரம், தந்தம், கல் ஆகிய திருமேனிகளே பயன்பாட்டில் இருந்தன.

## <u>உலோகத் திருமேனிகள்:</u>

- பல்லவர் காலத்தில்தான் முதன்முதலில் கடவுள் திருமேனிகள் உலோகத்தில் செய்யப்பட்டன.
- "மானசாரம்" என்ற சிற்ப நூல் மற்றும் "காமிகாகமம்" என்றும் ஆகமநூல் ஆகியவற்றில் படிமவியல் குறித்த தகவல்கள் விளக்கமாக கொடுக்கப்பட்டுள்ளன.
- உலோகத் திருமேனிகள் பொன், வெள்ளி , ஈயம், பித்தளை போன்ற உலோகங்களினால் செய்யப்படுகின்றன. இவற்றில் செம்பு அதிக அளவில் இடம் பெறுவதால் செப்புத் திருமேனிகள் எனப்படுகின்றது.

## மரத்திருமேனிகள்:

- காஞ்சிபுரத்தில் புராதனத் தலமான வரதராஜ பெருமாள் கோயிலில் உள்ள திருமேனி கல்லால் செய்யப்பட்டுள்ளது. இதற்கு முன் இக்கருவறையில் அத்திமரத்தால் ஆன திருமேனி இருந்தது. அதை அகற்றிப் பேழையில் வைத்து, குளத்தின் ஆழத்தில் புதைத்து விட்டு கல்லால் ஆன திருமேனி பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளது.
- ஏனைய மரங்களைவிட அத்திமரமே திருமேனிகள் செய்ய பயன்படுகின்றன. ஏனெனில் அத்திமரம் பல காலம் சிதையாமல் இருக்கும்.
- மாயவரத்திற்கு அருகிலுள்ள வானமுட்டி பெருமாள் கோயிலின் கருவறையில் 14 அடி உயர அத்திமரத் திருமேனி வண்ணப்பூச்சுடன் அமைந்துள்ளது.
- தஞ்சை மாவட்டங்களில் உள்ள மாரியம்மன் கோயில்களில் இன்றும் மரத்தால் ஆன மாரியம்மன் திருமேனிகள் வழிபாட்டில் உள்ளன.
- திருவண்ணாமலை அருகே உள்ள மங்கலம் என்ற ஊரில் மிகப் பிரம்மாண்டமான போத்துராஜா திருவுருவம் தேருடன் சேர்த்து 18 அடிக்கும் மேலே உள்ளது. இது தமிழகத்தின் மிகப்பெரிய மரத்திருமேனி ஆகும்.

## கல் திருமேனிகள்:

- கற்களால் ஆன திருமேனிகள் பல்லவர் காலத்தில் மிகச் சிறப்புற்றிருந்தன.

### முழுஉரு சிற்பங்கள்:

- இவை உருவத்தின் முன்னும் பின்னும் தெளிவாகத் தெரியுமாறு அமைக்கப்படும். (எ.கா) நடராஜர் திருமேனி.

## <u>புடைப்புச் சிற்பங்கள்:</u>

- இவை சுவர்கள், தூண்கள், பாறைகள் எனப் பலவற்றின் மீது உருவத்தின் ஒருபுறம் மட்டும் வடிக்கப்படும் திருவுருவ மேனிகளாகும்

## <u>செதுக்குச் சிற்பங்கள்:</u>

- இவை திருமேனி செய்யப்படும் உலோகம் அல்லது கல் அல்லது மரம் ஆகியவற்றின் தேவையற்ற பகுதிகளை நீக்கிய பின் தோற்றம் பெறுபவையாகும்.

## <u>கதை சிற்பங்கள்:</u>

- இவை இரண்டு வகையாகச் செய்யப்படுகின்றன. ஒன்று கோயில்களிலும் கோபுரங்களிலும் நிலையாக இருக்க செய்து வைப்பது.
- மற்றொன்று திருவிழாக்களுக்காக தற்காலிகமாகச் செய்து திருவிழா முடிந்ததும் நீரில் கரைத்து விடுவது (எ.கா) விநாயகர் திருமேனி, விநாயகர் சதுர்த்தி முடிந்தவுடன் திருமேனியை கரைத்து விடுவார்கள்.
- திருமேனிகள் செய்பவர்கள் சிற்பிகள், மண்ணீட்டாளர்கள் என்று அழைக்கப் பெற்றனர். அவர்களுக்கென்று தனி இலக்கண நூல்களும் பயிற்சி முறைகளும் இருந்தன.
- தமிழ் இலக்கியங்களில் “மயன்“ என்ற சிற்பி இருந்ததாகவும், அவன் பல அரிய சிற்பங்களை உருவாக்கியதாகவும் கூறப்பட்டுள்ளன.
- பழனி மலையில் உள்ள முருகன் திருமேனி நவபாஷாணத்தினால் உருவாக்கப்பட்டு போகர் சித்தரால் பிரதிஷ்டை செய்யப்பட்டதாகும்.

------*****------*****----